


# மின்மினி



நவம்பர் 2017 மின்னல் 01, கதிர் 03

## சங்கமம் தமிழ்ப்பள்ளி

"கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக" … குறள்: 391

### நிகழ்வுகள்

**நவம்பர் 18th 2017** - முதல் இடைநிலைத் தேர்வு (1st mid-term exam)

**நவம்பர் 25th 2017 –** பள்ளி விடுமுறை **(**Thanksgiving**)**

### சிறப்புச் செய்திகள்

நமது **சங்கமம் தமிழ்ப்பள்ளி நூலகம்** செப்டம்பர் (9/30/2017) முதல் செயல்படத் தொடங்கிவிட்டது.

புத்தகம் எடுத்து பயன்பெறவும். http://sangamamtamilschool.org/library/

**செயல்படும் இடம்:** Mercer Middle School, Virginia, USA




சங்கமம் தமிழ்ப்பள்ளியின் **ஓவியப் போட்டி Oct 21st** அன்று மிகச்சிறப்பாக நடைபெற்றது.

குழந்தைகளின் **புதுமை படைக்கும்** திறனை வளர்க்கும் விதத்தில் இந்தப் போட்டியின் **தலைப்புகள்** அவர்கள் வயதிற்கு ஏற்ப ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. தங்கள் திறமைகளை வெளிப்படுத்திய குழந்தைகளின் ஓவியங்கள் கண்களைக் கவரும் வகையில் இருந்தது என்பதில் ஒரு சிறிதும் ஐயமில்லை.

ஓவியப் போட்டியின் ஒருங்கிணைப்பாளர் **கீர்த்திகா உலகநாதன்**, தலைப்புகளை தேர்வு செய்ய உதவிய **ஆசிரியர்கள்,** குழந்தைகளுக்கு பயிற்சி கொடுத்த **பெற்றோர்கள்,** போட்டியை வெற்றிகரமாக நடத்த பல வகையிலும் உதவிய **தீபா செந்தில்நாத், ஷீபா, அபிராமி**, **ஆர்த்தி** மற்றும் **தன்னார்வலர்கள்** அனைவர்க்கும் சங்கமம் தமிழ்ப்பள்ளியின் பாராட்டுக்கள்.



**சங்கமம் தமிழ்ப்பள்ளி ஓவியப் போட்டி**






## புகைப்படம் தேவை!!!!

**செல்லங்களே!! பறவை பறப்பதற்கு முன் பறவையை படம் பிடிக்க வேண்டும். கொஞ்சம் உதவி செய்யுங்களேன் பார்க்கலாம்.**




**என் இசைக்கு விவசாயிகளின் நண்பனே மயங்குவான். நான் யார்???**


A. மகுடி
Magudi

B. கல்லவடம்
Kallavadam

C. தூரியம்
Thoorium

D. திமிலை
Thimilai









சிறார்களே, தீபாவளிக்கு என்ன செய்தீர்கள்?? பட்டாசு விட்டீங்களா?? புத்தாடை அணிந்தீர்களா?? பலகாரம் சாப்பிட்டீங்களா??

இதோ, நிலை நான்கு மாணவர்கள் கவின், கிரித்திக் மற்றும் அதித்தி நமக்காக தீபாவளி வாழ்த்து மடல் தயார் செய்துள்ளார்கள். ஆனால் வாழ்த்துமடல் இரண்டும் ஒரே மாதிரி இல்லைனு சொல்லுறாங்க.


ஆறு வித்தியாசம் இருக்குனு சொல்றாங்க. வித்தியாசத்தை கண்டு பிடிச்சு அவர்களிடம் சொல்லுங்களேன்.

ஆசிரியர்கள்: திருமதி ஆர்த்தி
திரு நீதி


குறும்புக்கார ஜம்பு கண்ணாடியை உடைத்து விட்டது. பாவம் ஒன்று சேர்க்க உதவி செய்யுங்களேன்!!



புள்ளிகளை வரிசைப்படி இணைத்து வண்ணம் தீட்டுங்கள்




புடிங்க புடிங்க எங்க நிழல் எங்களை விட்டு ஓடுது. ஒரு கோடு வரைந்து எங்களை எங்க நிழலோடு சேர்த்துவையுங்கள்.




தீபாவளி

கபி சாய்பாபா

தீபாவளி எல்லா வருடமும் வரும். தீபாவளி என்பது ஒளியின் திருவிழா. இந்தியாவில் அனைவரும் தீபாவளி கொண்டாடுவார்கள். ராமர் அயோத்திக்கு இந்த நாளில் வந்தார். அப்பொழுது அந்த மக்கள் விளக்கு ஏற்றினார்கள். அதனால் இப்பொழுதும் அனைவரும் தீபம் ஏற்றுகிறார்கள். மேலும், மக்கள் இனிப்புகள் அனைவருக்கும் கொடுப்பார்கள். பிறகு மக்கள் பட்டாசு வெடிப்பார்கள்.


தீபாவளியை உறவினர் மற்றும் நண்பர்களுடன் சேர்ந்து கொண்டாடுவோம். தீபாவளி அன்று காலை எல்லோரும் எங்கள் வீட்டில் எண்ணெய் தேய்த்து குளிப்போம். பிறகு புதுத் துணி அணிவோம். நண்பர்களுடன் இனிப்பு பரிமாறி பட்டாசு வெடித்துக் கொண்டாடுவோம். தீய அசூரர் குலத்தை அழிப்பதற்கு கடவுள் கிருஷ்ணனாய் அவதரித்து அசூரர் வாழ்வை முடித்து வைத்த தினம் தான் இந்த தீபாவளி பண்டிகை. பெரியவர்கள் முதல் சிறுவர்கள் வரை விரும்பப்படும் இந்த பண்டிகை உலகெங்கும் கொண்டாடப் படுகிறது.

## வரைந்து பழகுவோம்




## சுடோக்கு


கீழே கொடுக்கப்பட்டுள்ள சுடோக்குவை சரி செய்யுங்களேன் பார்க்கலாம்!



## விடை என்ன?? விடை என்ன??

கட்டுரை ______________ (எழுது, கடி)

நகம் ______________ (கிழி, வெட்டு)



தீபாவளி

ஸ்மீத்தா ஜேம்ஸ்


தீப ஒளி என்று பொருள் படும் தீபாவளி திரு நாள், இந்தியாவின் முதன்மைக் கொண்டாட்டங்களில் ஒன்று. இந்துக்கள் மட்டுமல்லாது பல்வேறு மதத்தினரும் சிறப்பாக கொண்டாடுகின்றனர்.

எதற்காக தீபாவளி கொண்டாடப்படுகிறது? தீபாவளிக்கு பல கதைகள், வரலாறுகள், பின்னணிகள் உள்ளன. வடமாநிலங்கள் பலவற்றில் தீபாவளி, அறுவடை திருநாளாக கொண்டாடுவார்கள். அன்றையதினம் விவசாயிகள் தங்களது கால்நடைகளுக்கு தீபாவளி விருந்தளிக்கின்றனர். இது நம்ம மாட்டுப்பொங்கல் போல்

வியாபாரிகளும் தொழிலதிபர்களும் புதுக்கணக்கு தொடங்கும் நாளாக தீபாவளி நாளை கொண்டாடு-கின்றனர்.

ராமர் ராவணனை வென்று சீதையை மீட்டு அயோ-த்திக்கு திரும்பும் நாள் அன்று அவருக்கு மன்னனாக முடி சூட்டினர். இந்த நாளை தீபாவளியாகு மக்கள் கொண்டா-டினர். தென்னிந்தியாவில் அரக்கன் நரகாசுரனை கிருஷ்ணர் வதம் செய்த நாளை தீபாவளியாக கொண்டாடுகின்றனர்.

நரகாசுரன் கடும்தவம் புரிந்து பிரம்மனிடமிருந்து தன் தாயின் கையால் தான் தனக்கு மரணம் நிகழ வேண்டும் என்ற வரத்தைப் பெற்றான். இதனால் தேவர்களையும்



மக்களையும் கொடுமை படுத்தினான். இவர்கள் அனைவரும் சேர்ந்து கிருஷ்ணரிடம் முறையிட்டதால் அவர் நரகாசுரனை வதம் செய்தார். இந்த நாளை தீபாவளியாக கொண்டாடுகின்றனர்.

பட்டாசு வெடிப்பது ஏன்? தீபாவளி என்றால் தீப ஒளியும் பட்டாசுக்களும் தான் நினைவிற்க்கு வரும் விளக்கு ஏற்றுவதனால் வீடுகளில் இருள் விலகி வளம் பெருகும். தீய சக்திகளை விரட்டியதை மகிழ்ச்சியுடன் கொண்டாட பட்டாசு வெடிக்கப்படுகிறது

இவ்வாறு தீபாவளித் திருநாள் இந்துக்களின் மிகமுக்கிய நாளாக விளங்குகிறது




ஸ்மீத்தா ஜேம்ஸ்

மேல்நிலை வகுப்பு

ஆசிரியர்கள்: திருமதி மஞ்சு அய்யம்பாளையம்
திரு ரவி




## கண்டுபிடி கண்டுபிடி

தொப்பி போட்ட காவல்காரன், உரசி விட்டால் சாம்பல் அது என்ன ???

கிண்ணம் போல் பூ பூக்கும், பானை போல் காய் காய்க்கும் அது என்ன ???






## பலே! பலே!

**தா. இ. கா இடைநிலை-2** மாணவர்கள் நமது **மின்மினி** செய்திமடலை அச்சிட்டு, வாசித்து செய்திமடலில் இருக்கும் புதிர்களுக்கு விடை கண்டுபிடித்து மகிழ்ந்தார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம். அவர்களை ஊக்குவித்த பெற்றோர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் நன்றி!! **அனைவரும் இவர்களைப் போல் செய்திமடலை வாசித்து பயன்பெறுமாறு கேட்டுக்கொள்கிறோம்.**

**ஆசிரியர்கள்:** திருமதி மஞ்சு ஷண்முகம்
திரு மோகன்

## சென்ற இதழ் (அக்டோபர்) விடைகள்

பச்சடி, கூட்டு, பொரியல், அவியல், வறுவல் ஊறுகாய் ஆகியவற்றை வல[illegible]லிருந்து இடது பக்கமாக பரிமாறவேண்டும் 3




அன்னம் 6

இனிப்ப பலகாரம் பாயாசம் 2

உப்பு 1

புளி சாதம் எலுமிச்சை சாதம் போன்றவை 5


அப்பளம், வடை போன்ற நொறுக்கு தீனி வகைகள் 4

D. தண்ணுமை (அ) மிருதங்கம்



"முத்து வீட்டுக்குள்ளே தட்டுப் பலகை" அது என்ன **நாக்கு**

"விடிய விடிய வேலை செய்பவனுக்கு ஒரு கை சின்னதாம்" அவன் யார்??? **கடிகாரம்**






**ஒவ்வொரு வரிசையிலும் வேறுபட்ட ஒன்றை வட்டமிட்டு அது என்ன என்று எழுதுங்க.**

உங்கள் குழந்தைகளுக்கு கட்டுரை அல்லது கதை எழுதுவதில் ஆர்வம் இருப்பின், அவர்களின் படைப்பை newsletter@sangamamtamilschool.org என்ற மின்னஞ்சலுக்கு அனுப்புங்கள். குழந்தைகளின் படைப்பை ஆய்வு செய்த பின் அடுத்து வரும் "**மின்மினி**" செய்திமடல் பதிப்புகள் ஒன்றில், அவர்கள் கட்டுரையை மலரச் செய்வோம்.

# சங்கமம் தமிழ்ப்பள்ளி Halloween 2017









நம் **சங்கமம்** குடும்பத்தின் **Halloween** கொண்டாட்டம் **Oct 28th** அன்று மிக அருமையாக கொண்டாடப்பட்டது. சிறியவர் முதல் பெரியவர் வரை கொண்டாட்டத்தில் கலந்துகொண்டு மகிழ்ந்தனர். நம்ம குட்டீசுகளும் செம சூப்பர் ரா டிரஸ் பண்ணீட்டு வந்து நம் கண்களுக்கு மிகப் பெரிய விருந்து குடுத்தாங்க.**Tunk or Treat** ஆ? அப்படினா என்ன? என்று கேட்டுவிட்டு எவ்வளவு அழகா தங்கள் வாகனத்தை அலங்கரித்து வந்திருக்காங்கனு பாருங்க**. Pirates, Candy Land, Elsa, Spookies, Batman, Pumpkin** என்று பல **தீம்** ல தங்கள் வாகனத்தை அலங்கரித்து வந்து நம்மை அசத்திட்டாங்க.

ஏமாந்தா pirates கடத்திட்டு போயிருவாங்கனு குட்டீஸ்சுக்கு தெரியாம pirates அடித்த மத்தள இசைக்கு மயங்கி கூட்டம் கூட்டமாக வந்து மிட்டாய் வாங்கிட்டு இருந்தாங்க. நல்ல வேளை இவர்கள் நல்ல pirates போல இருக்கு, குழந்தைகள் கொண்டாட்டம் முடிந்து பத்திரமாக வீடு திரும்பினார்கள்.

தமிழ்ப் பள்ளியில Halloween ஆ?? அட என்ன தான் பண்ணுறாங்க? நாமும் கலந்துக்கலாமே அப்படினு நினைத்து கொண்டாட்டத்துல கலந்துக்க **President Mr. Donald Trump** நம் பள்ளிக்கு வந்திருந்தார். சிறார்கள் Trump ஐ பார்த்த மகிழ்ச்சியில் இவர் Trump ஐ போல வேஷம் போட்டவர் என்று தெரியாமல் பாவம் அவருடன் புகைப்படம் எடுத்துக்கொண்டனர்.

கொண்டாட்டத்தில் கலந்துகொண்ட வாகன உரிமையாளர்கள் பல வகையான விளையாட்டுகளை நடத்தி குழந்தைகளை மகிழ்வித்தனர்.

நம் குழந்தைகள் இதுபோல் **Trunk or Treat** டை பார்த்ததில்லை என்று வியந்தபடி ஒவ்வொரு வாகனங்களுக்கும் சென்று **வாகன உரிமையாளர்கள் செய்த தந்திரத்தை முறியடித்து தங்கள் வெகுமதியைப் பெற்றுச் சென்றனர்.**

Halloween Team க்கு பின்னாடி இருந்த **Elsa, Spookies, Candy Man, Pirate, Batman, Pumpkins** யாருன்னு யோசிக்கிறீர்களா?? **Vero, Vinu, Saravana, Sudha, Anuradha, Sangeetha Ravikumar, Rekha Premkumar, Vani Sampath, Deepa Senthilnath, Keerthika, Bakiyaraj, Sheebha, Suganya.**

இவ்விழாவின் அனைத்து நிகழ்வுகளையும் அழகாகப் பதிவு செய்த **திரு. அறிவானந்தம்** மற்றும் **திரு. சம்பத்** அவர்களுக்கு பாராட்டுக்கள்.

